[1971 ஜூன் 23

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, மீஞ்சூரில் இப்பொழுது ஈ.எஸ்.ஐ. மருந்தகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ரெட்ஹில்ஸிலும் அமைப்பதற்கு அரசு யோசித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 26, 27 ஆகிய இரண்டு வினாக்களும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### வானொலி நிகழ்ச்சிகள்.

*26 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் உள்ள வானொலி நிலையங்களில், இஸ்லாமிய, கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கு இன்னும் அதிக சந்தர்ப்பமும், நேரமும் அளிக்க அரசு ஆவன செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

*27 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்க மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மதப் பிரச்சாரத்தால் ஜாதிகள் வளர்கின்றன என்பது உண்மையா? அம்மாதிரி மதப் பிரச்சாரத்தைத் தடை செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது வானொலி சம்பந்தமான பிரச்னை. ஆகவே, சர்க்காரும் மதப்பிரச்சாரமும் என்கின்ற இணைப்பில் இது வராது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சமயப் பிரச்சாரங்கள் செய்ய அனுமதிக்கப்படும் வானொலியில் எல்லாக் கருத்துக்களுக்கும் சம வாய்ப்பளிக்கின்ற அடிப்படையில் வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை அனுமதிக்க வேண்டி மாநில அரசு மத்திய அரசிடம் கூறுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திரு. கிட்டப்பா அவர்களுடைய முதல் கேள்வி, 'வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்க மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா?' என்பதாகும். இப்பொழுது அவர் கேட்டிருக்கின்ற துணைக் கேள்வியும் அதைச் சார்ந்ததாகவே இருக்கும் என்ற கருத்தில் நான் பதில் அளிக்கிறேன். வானொலியிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது என்பது, மற்ற மதப் பிரசாரங்களுக்கு எதிரிடையான பிரச்சாரமாக இருக்கக் கூடாது. அப்படி

1971 ஜூன் 23]

எதிரிடையான பிரச்சாரமாக இல்லாமல், மற்றவர்கள் மனம் புணபடாதவகையில், பகுத்தறிவுப் பிரச்சாரம் நடைபெறலாம. அதிலே இந்த அரசுககு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. பகுத்தறிவுப பிரசசாரம் என்பது தேவைப்படும் ஒன்றுகும். இன்றைக்கும் கிராமப்புறங்களில் மக்கள் சில நோய் நொடிகளுக்கு மருத்துவர்களை நாடாமல் மந்திரவாதிகளை நாடிக் கொண்டிருக்கிறுர்கள். இதுபோன்ற கருத்துக்களை வானெலியின் மூலம் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்ற தலைப்பிலே செய்யலாம். பேய், பூதம், பிசாசு, மாய மந்திரங்கள், தந்திர ஜாலங்கள் இன்றைக்குக் கிராமப்புறங்களில் ஆட்டிப் படைத்துக் கொண்டு இருக்கின்றன. அவைகள் கிராமங்களை விட்டு அகல வேண்டு மானல் வானெலி மூலமாகப் பிரச்சாரம் செய்யலாம். இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துரைக்கும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் பதில் அளிக்கையிலே ஆஸ்திக மதவாதிகளின் மனம் புண்படாதபடி பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதற்கு வானெலியிலே அனுமதி வழங்கலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆஸ்திகர்கள் செய்கின்ற பிரச்சாரம் நாஸ்திகர்களின் மனத்தைப் புண்படுத்துகிறது என்பதை நம்முடைய அரசு அறியுமா? ஆகவே, நாஸ்திகர்கள் தங்களுடைய பிரச்சாரத்தைச் செய்யும்பொழுது வேண்டுமென்றே ஆஸ்திகர்கள் தங்கள் மனத்தைப் புண்படுத்து வதாக் கூறிக் கொண்டு நாஸ்திகர்களுக்குச் சந்தர்ப்பமில்லாமல் செய்கிறுர்கள். ஆஸ்திகர்களுக்கு எந்த அளவிற்கு வானெலியில் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு நாஸ்திகர் களுக்கு சந்தர்ப்பம் வாங்கிக் கொடுக்க நம்முடைய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாஸ்திகர்களுக்கு வானெலியில் சந்தர்ப்பமே இல்லை என்று சொல்லமுடியாது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வானெலியில் எத்தனையோ முறை பேசியிருக்கிறுர்கள். அவரை யாரும் ஆஸ்திகர் என்று சொன்னது இல்லை. அவரும் சொல்லிக் கொண்டதில்லை. அவர் எழுதிவைத்த மரண சாசனத்தில் கூட தன்னை ஒரு நாஸ்திகர் என்று வலியுறுத்த, மதச்சடங்குகள், சம்பிரதாயங்களில் நம்பிக்கையில்லை என்ற கருத்தில் தெரிவித்திருக்கிறுர். ஆகவே வானெலியில் நாஸ்திகர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று சொல்ல முடியாது. ஆனல் ஒருவர் கருத்தைச் சொல்லும் போது, மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்தும்படி சொல்லக் கூடாது. அவரவர் கருத்தைச் சொல்லலாம். புண்படுத்தும் நோக்கத்தில் இல்லாமல், பண்படுத்தும் நோக்கத்தை மனத்திலே கொள்வது தான் சாலச் சிறந்தது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த வானெலியில் ஆஸ்திகர்கள் இம்மாதிரி ஆஸ்திகப் பிரச்சாரத்தைப் பற்றியும் ஒரு மதத்தைப் பற்றியும் பேசுகிறுர்களே. வாரம் ஒரு முறையாவது இம்மாதிரி பகுத்தறிவுப் பிரச்சாரத்தை, முதலமைச்சரவர்கள்

சொன்னதுமாதிரி பிறர் மனம் புண்படாதபடி நடத்த மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொள்ளுமா? நம்முடைய பிராந்தியச் செய்திகளில் இம்மாதிரியான அறிவிப்புகள் கொடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த மாநில அரசு சமதர்மக் கொள்கையில் மட்டுமல்ல, சமூகச் சீர்திருத்தக் கொள்கையிலும் நாட்டம் கொண்டது என்பதால், இந்தக் கோரிக்கையை மத்திய அரசின் முன் வைக்கும்.

DR. H. V. HANDE: Instead of entering into a controversy about Asthikas and Nasthikas, as the Hon. Chief Minister suggested will he evolve a formula of suggesting to the Government of India to have every day morning one 'Kural' sung in a sweet manner and properly explained so that it would not hurt the feelings of either Asthikas or Nasthikas and it would be educating the students also? It is not at present being done in the manner in which it should be done and also not sung in the proper manner. Will the Hon. Chief Minister persuade the Central Government to have it regularly for 15 minutes when one 'Kural' will be properly sung and properly explained? Will the Hon. Chief Minister impress on the Central Government to have this done?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன அந்தக் கருத்தையும் ஏற்று சிபாரிசு செய்யலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஆஸ்திகக் கருத்துக்கள் இவைகளெல்லாம் ஒவ்வொருவர் மனத்தைப் புண்படுத்தலாம். காலையிலே சுப்ரபாதம் காதில் ஒலிக்கிறது, இல்லையென்றால் தேவாரம் ஒலிக்கிறது. இதேபோலத் திருக்குறளை அன்றாடம் ஒரு குறள் சொல்ல வலியுறுத்துமா இந்த அரசாங்கம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கெனவே டாக்டர் ஹாண்டே அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். திருக்குறளையும் வானொலியில் இப்பொழுது எப்போதாவது சொல்கிறார்கள், சொல்லாமல் இருந்துவிடவில்லை. அதை ஒவ்வொரு நாளும், ஒரு குறளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதுபோலவும், கற்பிப்பது போலவும், பொருள், பொழிப்புரை, பதவுரை என்பதுபோலவும் அதை ஆக்கலாம் என்ற சிபாரிசை வானொலிக்கு மாநில அரசு செய்யும்.

திரு. பெ. மலைச்சாமி: எந்தெந்த சமுதாயத்திற்கு எத்தகைய நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டுமென்பது அந்தந்த மாநிலங்களுக்குத்தான் தெரியும். ஆகவே, தமிழகத்தின் வானொலி நிலையங்களைத் தமிழக அரசின் நேரடி நிர்வாகத்திற்குக் கொண்டு வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ராஜமன்னார் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பிறகு எடுக்கப்பட வேண்டிய முடிவுகளில் ஒன்றாக வேண்டுமானால் இது இருக்கலாம்.

1971 ஜூன் 23]

THIRU K. M. SUBRAMANIAM: Is the Hon. Chief Minister aware that religious propaganda can bring in a sort of equality between castes and also it is the fundamental thing of a religious propaganda to abolish castes? I may also ask whether the Hon. Chief Minister is aware that in Ramayana Rama is the closest friend of Guha and there is no caste distinction at all in Ramayana (Mr. Speaker: The hon. Member should put it in the form of a question. If there is correct and proper understanding of religious propaganda it will be responsible for abolishing castes in this country—is the Hon. Chief Minister aware of that?).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் இராமாயணத்தைப் படித்த பிறகும் ஜாதி வேற்றுமைகள் நாட்டைவிட்டுத் தொலையவில்லை என்பதை மறந்து விடக் கூடாது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுப் பிரசாரத்தை வானொலியில் பரப்ப தமிழக அரசு மத்திய அரசைக் கேட்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பகுத்தறிவுப் பிரசாரத்தைத் தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுப் பிரசாரம் என்றோ, இன்னொருவருடைய பகுத்தறிவுப் பிரசாரம் என்றோ வேறுபடுத்திச் சொல்வதற்கில்லை. பெரியார் அவர்களே பகுத்தறிவுப் பிரசாரம் அவருடைய பகுத்தறிவுப் பிரசாரம் என்று கூறவில்லை. எந்தப் பகுத்தறிவுப் பிரசாரமாக இருந்தாலும் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுக்கு, நாடு திருந்தக்கூடிய அளவுக்கு, அதன் காரணமாக நாட்டில் கலகம் விளையாமல் இருக்கும் அளவுக்கு வடிகட்டப்படும் முறையில் வானொலியில் வருவதுதான் நல்லது.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, மார்க்கப் பிரச்சாரம் என்பதும், பகுத்தறிவுப் பிரச்சாரம் என்பதும் பண்புப் பிரச்சாரந்தான், பகுத்தறிவு என்ற பெயரிலோ அல்லது மார்க்கம், மதம், இதிகாசம், இலக்கியம் என்ற பெயரிலோ தவறான பிரசாரம் செய்வதற்கு மார்க்கத்திலோ அல்லது பகுத்தறிவு சம்பந்தப்பட்ட தொடர்பிலோ எந்தவிதமான சம்பந்தமும் இருக்கவில்லை. ஆகவே, பகுத்தறிவுப் பிரசாரமாக இருந்தாலும், மார்க்கப் பிரசாரமாக இருந்தாலும் மனிதாபிமானப் பண்பை ஒட்டியே அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அந்த முறையில் முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை விரும்பிக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த விளக்கத்தை நான் ரசிக்கிறேன். (சிரிப்பு)

திரு. எம். சுரேந்திரன்: பகுத்தறிவுப் பிரசாரம் என்பது நாத்திகர்களுக்கும், ஆத்திகர்களுக்கும் சம்பந்தப்பட்டது என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆத்திகர்களுடைய பிரசாரம் பகுத்தறிவுப் பிரசாரமா, நாத்திகர்களுடைய பிரசாரம்

[1971 ஜூன் 23

பகுத்தறிவு பிரசாரமா என்பதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் நிலையில் விஞ்ஞானம் விளங்கிக் கொள்ளமுடியாத அளவுக்கு வெகுவேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் வானொலியில் முதலியார், செட்டியார், நாயக்கர் என்று பெயர் சொல்லுவதை நீக்குவது பகுத்தறிவைச் சேர்ந்ததாக இருக்காதா? அப்படிப் பெயரோடு ஜாதிப் பெயரைச் சேர்த்துச் சொல்லுவதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பகுத்தறிவு என்பது உலகத்திலுள்ள ஜீவராசிகளிலேயே மனிதனுக்கு மட்டும்தான் இருக்கிறது. மற்ற ஜீவராசிகளுக்கு ஐந்து அறிவு என்றால் மனிதனுக்கு ஆறாவது அறிவாக பகுத்தறிவு உண்டு என்பதுதான் விசேஷமான அம்சம். இதிலே எது பகுத்தறிவு, எது பகுத்தறிவு அற்றது என்பது காலத்திற்கேற்றாற்போல் ஏற்படுகின்ற கொள்கை மாற்றங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்க வேண்டிய ஒன்றாகும். எனவே, பழங்காலப் பழக்க வழக்கங்கள் இந்தக் காலத்திற்கு ஏற்றவையாக இல்லாததை ஒதுக்கிவிட்டு நாம் வாழ்க்கை நெறி முறைகளை வகுத்திட வேண்டுமென்பது பகுத்தறிவு. பகுத்தறிவு இயக்கம் என்பது அரசியல் கட்சித் தொடர்புடையது என்று யாரும் கருதிக்கொள்ளக் கூடாது. அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமானது, கம்யூனிஸ்டு கட்சிக்குச் சொந்தமானது, காங்கிரஸ் கட்சிக்கு விரோதமானது என்றெல்லாம் தவறாகக் கருதிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பகுத்தறிவு என்ற அடிப்படையில் மனிதர்கள் மனிதர்களாக வாழவும், சமத்துவ நோக்கத்தோடு வாழவும், வகுப்பு வேற்றுமைகள் அற்ற முறையில் வாழவும், மத ஒற்றுமையோடு வாழவும் வழி வகுப்பது தான் பகுத்தறிவு. பகுத்தறிவுப் பாதையை அந்த அடிப்படையில் தான் காணவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியின்படி ஜாதிப் பெயர்களை எல்லாம் நம்முடைய பெயருக்குப் பின்னால் இருந்தால் நீக்கிவிடுவது என்பது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்று அல்ல. அவர் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**திரு. என். இராஜாங்கம்:** நாத்திகம் என்று சொல்வது ஆத்திகம் என்று சொல்வது போல் ஒரு மதந்தான். நாத்திகமே ஒரு மதந்தான். ஆனால் நாத்திகம் என்று சொல்லுவதிலே உள்ள குறைகள், இடையூறுகளை நோக்கி அதற்குப் பகுத்தறிவு என்ற வார்த்தை போதும் நாத்திகம் என்ற வார்த்தை தேவையில்லை என்பதை அரசு ஏற்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாம் கூட நாத்திகம் என்பதை விட்டுவிட்டோம். ஆனால் சில பேர்தான் அதை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் பகுத்தறிவு என்றுதான் சொல்லுகிறோம். திரு. ராஜாங்கத்தின் அறிவுரையை எதிர்க்கட்சியில் இருக்கும் காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்வது நல்லது.

1971 ஜூன் 23]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆத்திகப் பிரசாரத்தில் பல பகுத்தறிவுக் கருத்துக்கள் இருக்கின்றன என்பதை இந்த அரசாங்கம் அறியுமா? அதிலே தலையிடுவதற்கு முன்னாலே தங்களுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி யோசித்துத் தலையிடு வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்விக்கு முன்பே தாங்கள் அதைப் பயன்படுத்தி இருக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இது கேள்விக்குப் பதில் அல்ல ; கேள்வியைச் சமாளிக்கச் சொல்லக்கூடிய பதில்.

**திரு. செ. கந்தப்பன் :** தமிழ் உயர்தனிச் செம்மொழி என்று உலகமே பாராட்டுகின்ற நிலையில் இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டு பல மேதைகளால் உருவாக்கப்பட்ட தமிழ் நூல்களை, சங்க நூல்களை தமிழர்களே தெரியாதிருக்கும் நிலையில் வானொலி யில் அதற்கு முக்கியத்துவம் தரும் வகையில் நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது வானொலியில் இலக்கியங்கள், கவியரங்கங்கள், காவியங்கள் பற்றிய நய உரைகள் இவைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதை மேலும் விரிவாக்கும் வகையில் ஆக்கிடவேண்டுமென்ற பரிந்துரையை மாநில அரசு மத்திய அரசுக்குச் செய்யத் தவறாது.

*Co-operative Coir Societies for Repatriates from Burma*

* 30 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to start Co-operative Coir Societies in the District Centres to rehabilitate the Burma repatriates?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பர்மாவில் இருந்து வந்த தமிழ் மக்களுக்குச் சலுகைகள் செய்து தருவதற்காக மத்திய அரசு பணம் ஒதுக்கி இருக்கிறது. அம்மாதிரி ஒதுக்கப்பட்ட பணம் அந்த அகதிகளுக்குக் கொடுக்கப்படாமல் மீதியாகிவிட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அகதி களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் கொடுக்கப்படாமல் மிச்சமாகி இருப்பதாக அறியவில்லை. அவர்கள் பல வழிகளில் தொழில் செய்ய அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கு லோன் கொடுக்க ஒதுக்கப்பட்ட பணத்தை அரசாங்கம் கூறிய முறைப்படி அவர்கள் வாங்குவதற்குத் தயா ராக இல்லையென்ற காரணத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி செலவழிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தனிக் கேள்வி போட்டால் விவரம் கூற முடியும்.